[1982 பிப்ரவரி 2

பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் திட்டம்.

*வினா எண். 15— திரு எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேராவூரணி அரசினர் தாலுகா தலைமை மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23-ஆம் நாள் முதல் சயல்பட்டு வருகிறது.

திரு எம் ஆர் கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கியதற்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, தமிழகத்தின் பழம் மருத்துவமான சித்த மருத்துவத்திற்கு என்று, எல்லா மருத்துவ மனைகளிலும், சித்த மருத்துவப் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Sanction has been accorded to the opening of Siddha Wings in 30 Government Hospitals. 30 மருத்துவ மனைகளிலே நாம் சித்த மருத்துவத்திற்காகப் பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம் என்ற நல்ல செய்தியுடன், 200 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கூட இதற்கென பிரிவு ஏற்படுத்தி, அதற்காக டாக்டர்களை 100 இடங்களில் நியமித்து உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 16 முதல் 20 வரை, அவற்றுக்கான விடைகளுடன் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெறும்.

தனியார் துறை மூலம் கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டம்.

*வினா எண். 16—திரு. சி. கோபால் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்ககண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கிராமங்களுக்குச் செல்லும் மினி பஸ்ஸை தனியார் துறையிடம் விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. தனியார் துறையினரும் உரிமங்கள் பெற்று கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மறைமலை நகரிலிருந்து நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 17—திரு இ. கணேசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னைக்கு அருகில் உருவாகிவரும் மறைமலை நகரிலிருந்து தாம்பரத்திற்கும், செங்கற்பட்டிற்கும் நகரப் பேருந்து விட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) :— மறைமலை நகர் மக்களின் வசதியை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து சிங்கப்பெருமாள் கோயில் வரையிலும் மறைமலை நகர் வழியாக (தடம் எண் : டி. 32) ஒரு நகரப் பேருந்தும், செங்கற்பட்டிலிருந்து மாடம்பாக்கம் வரையில் மறைமலை நகர் வழியாக (தடம் டி. 11) ஒரு நகரப் பேருந்தும் நீண்ட நாட்களாக இயங்கி வருகின்றன.

மறைமலை நகர் மக்களின் தற்போதைய தேவையை முன்னிட்டு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள் முதல் செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரையில் மறைமலை நகர் வழியாக (தடம் எண். டி. 60 கூடுதலாக இரண்டு நகரப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

மேற்கொண்டு தேவை ஏற்பட்டால் மறைமலை நகரிலிருந்து கூடுதல் பேருந்துகள் விடுவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் லாரிகளில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் திட்டம்

*வினா எண். 18—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தனியார் லாரிகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி அமைக்க வேண்டும் என்று உத்தரவிடும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. : ஆம்.